அறிந்தேற்பு : 341/1980

தோற்றம் : 1971

TNGCTA

# தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம்

(Recognized by the Govt. of Tamilnadu G.O.No. 341, Dt. 22-03-1980)

**TAMILNADU GOVERNMENT COLLEGE TEACHERS' ASSOCIATION**

பேரா. நரசிங்கம் நிலையம், 2, சைடோஜி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005. Ph : 28516573, Telefax : 28414354

**முனைவர் நொா. கா. கந்தசாமி** — தலைவர்

**முனைவர் இரா. தாமோதரன்** — பொதுச்செயலர்

**பேரா. ச. சிவகுமார்** — பொருளர்

**முனைவர் த. வீரமணி**
**முனைவர் உ. சிவப்பிரியா**
துணைத் தலைவர்கள்

**முனைவர் க. இரமேஷ்**
**பேரா. த. மதுரம்**
இணைச்செயலர்கள்

சுற்றறிக்கை எண். 2/2016 நாள் : 04.08.2016

## அன்பிற்குரிய தோழர்களே! தோழியரே!

**வணக்கம்**

பெருமைக்குரிய நமது இயக்கத்தின் மீது நீங்கள் வைத்துள்ள நம்பிக்கையைக் காப்பாற்றும் விதத்திலும் உங்களின் தேவைகள் மற்றும் கோரிக்கைகளை உடனுக்குடன் நிறைவேற்றும் வகையிலும் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள மாநில ஆட்சிக்குழு பதவியேற்றநாள்முதல் அயராது உழைத்துக் கொண்டிருக்கிறது.

கடந்த மாதம் வெளியிடப்பட்ட நமது முதல் சுற்றறிக்கையின்படி, மாநில ஆட்சிக்குழு உறுப்பினர்கள் 14.06.2016 அன்று மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர், உயர்கல்வித் துறைச்செயலர் மற்றும் கல்லூரிக்கல்வி இயக்குநர் ஆகியோரைத் தனித் தனியாகச் சந்தித்து அவசர நடவடிக்கைக்குரிய முக்கிய கோரிக்கைகளை விவாதித்தனர்.

### இயக்குநர் நியமனம்

மாநில ஆட்சிக்குழு முழு கூடுதல் பொறுப்பிலுள்ள இயக்குநர் முனைவர் க. சேகர் அவர்களின் பணிநிறைவு காலம் ஜூலை 31 அன்று முடிவடைவதால், முழுநேர இயக்குநரைப் பணிமூப்பு அடிப்படையில், நேர்மையான முறையில் நியமனம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தவும் பிற கோரிக்கைகளை உடனடியாகத் தீர்க்கவேண்டிய அவசியத்தை உயர்கல்வித்துறை அமைச்சருக்கு எடுத்துரைக்க வேண்டியும் 26.06.2016 ஞாயிற்றுக்கிழமை அன்று தருமபுரியிலும் 28.06.2016 செவ்வாய்க்கிழமை அன்று சென்னையில் அமைச்சரின் அலுவலகத்திலும் சந்தித்தது. ஆனால் அமைச்சரைச் சந்தித்தபோது பல்வேறு சூழ்நிலைகளால் நமது கோரிக்கைகளை விரிவாக எடுத்துரைக்க இயலவில்லை.

தொடர் முயற்சியின் காரணமாக மாநில ஆட்சிக்குழு 14.07.2016 அன்று இரவு 11:10 மணியளவில் மாண்புமிகு அமைச்சர் அவர்களை அவரின் விடுதி அறையில் சந்தித்து இயக்கத்தின் கோரிக்கைகள் தொடர்பாக விவாதித்தது. கல்லூரிக் கல்வி இயக்குநரகத்திற்கு முழு நேர இயக்குநரைப் பணிமூப்பு அடிப்படையில் நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தியது.

இச்சுற்றறிக்கை அச்சுக்குச் செல்லும் நேரத்தில் கல்லூரிக்கல்வி இயக்குநராகத் திருமதி.எஸ். மதுமதி இ.ஆ.ப. அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை அறிந்து இயக்கம் அதிர்ச்சி அடைகிறது. இது நமது உரிமையினைப் பறிக்கும் செயலாகும். எனவே உடனடியாக இந்நியமனத்தைத் திரும்பப் பெற்றுப் பணிமூப்பு அடிப்படையில் கல்லூரிக் கல்வி இயக்குநரை நியமிக்க வேண்டும் என அரசை வலியுறுத்துகிறது.

### உயர் கல்வித்துறைச் செயலருடனான சந்திப்பு

21.06.2016 செவ்வாய்க்கிழமை அன்று மாநில ஆட்சிக்குழு உயர்கல்வித்துறைக்குச் செயலராகப் பெறுப்பேற்றுள்ள மரியாதைக்குரிய திரு.ஏ. கார்த்திக் இ.ஆ.ப. அவர்களைச் சந்தித்துக் கழகத்தின் கோரிக்கைகளை விவாதிக்க அனுமதி கோரியது. புதிதாகப் பொறுப்பேற்றுள்ள உயர்கல்வித்துறைச் செயலர் திரு.ஏ. கார்த்திக் இ.ஆ.ப. அவர்களை 21.06.2016 செவ்வாய்க்கிழமை அன்று மாநில ஆட்சிக்குழு சந்தித்தபோது உரிய மரியாதையுடன் அழைத்து, நமது கோரிக்கைகளை ஒன்றன் பின் ஒன்றாகக் கேட்டறிந்தார். அவருடைய அணுகுமுறை மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது. நமது கோரிக்கைகள் குறித்து ஆவனச் செய்வதாக உறுதியளித்தார்.

### இணை இயக்குநர்கள்/முதல்வகள் நியமனம்

ஆட்சிக்குழு 28.06.2016 செவ்வாய்க்கிழமை அன்று உயர்கல்வித்துறைச் செயலரை மதியம் 1.00 மணியளவில் சந்தித்தது. இந்தச் சந்திப்பின்போது இணை இயக்குநர் பதவி உயர்வானது. பணிமூப்பின் அடிப்படையிலேயே வழங்கவேண்டும் என்றும் பணிமூப்பைக் கருத்தில் கொள்ளாமல் பதவி உயர்வு வழங்கப்பட இருப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தது. செயலர் அவர்கள் உடனடியாக இயக்குநரிடம் விவாதித்துத் தவறு இருப்பின் முறையற்ற பதவி உயர்வு தடுத்து நிறுத்தப்படும் என்று உறுதியளித்தார்.

இதற்கிடையே முறைகேடாக இணை இயக்குநர் ஓரிருவருக்கு மட்டும் பதவி உயர்வு அளிக்க இருப்பதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இயக்கத்தின் பொதுச் செயலர் 29.06.2016 அன்று காலை 8.00 மணியளவில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து இணைஇயக்குநர் பதவி உயர்வு பணிமூப்பு அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் என்றும் முறையற்ற வகையில் ஓரிருவருக்கு மட்டும் இணை இயக்குநர் பதவி உயர்வு வழங்கப்படக் கூடாது என்றும் வலியுறுத்தியதன் அடிப்படையில் முறையற்ற வகையில் ஒருவருக்கு இணைஇயக்குநர் பதவி உயர்வு வழங்கப்படவிருந்த ஆணை இரத்துச் செய்யப்பட்டது.

கலந்தாய்வு நடப்பதற்கு முன்பே முதல்வர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும் என்று தொடர்ந்து மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சரையும், உயர்கல்விச் செயலரையும் சந்தித்து வலியுறுத்தியும் பத்திரிகைச் செய்தி வாயிலாக வேண்டுகோள் விடுத்ததன் விளைவாகவும் அரசு ஆணை (எண் 270 நாள் 22.07.2016) மூலம் 4 முதல்வர்கள் இணை இயக்குநர்களாகவும் அரசு ஆணை (எண் 269, நாள் 22.07.2016) மூலம் 19 இரண்டாம் நிலைக் கல்லூரி முதல்வர்கள் முதல்நிலைக் கல்லூரி முதல்வர்களாகவும் பதவி உயர்வு பெற்றிருக்கின்றனர்.

எனினும் சுமார் 50க்கும் மேற்பட்ட கல்லூரிகளில் முதல்வர் பணியிடங்கள் காலியாக இருப்பதைச் சுட்டிக்காட்டி உடனடியாக நிரப்பப்படவேண்டும் என்று கழகம் தொடர்ந்து வலியுறுத்துவதுடன் நமது இயக்கத்தின் நிலைப்பாடான பணிமூப்பு அடிப்படையில், கலந்தாய்வின் மூலமே முதல்வர்கள் மற்றும் இயக்குநர் பணியிடங்கள் நிரப்பப்படவேண்டும் என்பதை அடையும் வகையில் இயக்கம் தொடர்ந்து செயலாற்றி வருகிறது.

### அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் நியமனம்

06.07.2016 புதன்கிழமை அன்று மீண்டும் ஆட்சிக்குழு உயர்கல்விச் செயலரைச் சந்தித்து, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து அரசு கலை அறிவியல் - கல்வியியல் கல்லூரிகளில் ஒப்பந்த அடிப்படையில் அயற்பணியாக நியமனம் செய்யப்பட்ட 369 பேராசிரியர்களால் அரசு கல்லூரிகளில் ஏற்பட்டுள்ள பல்வேறு விதமான பிரச்சினைகளை விவாதித்ததுடன் எதிர்வரும் காலத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களை அரசு கலை அறிவியல் - கல்வியியல் கல்லூரிகளில் நியமனம் செய்யப்படக் கூடாது என்று வலியுறுத்தியது. உயர்கல்வித் துறைச் செயலர் அவர்கள் இதுபற்றி இயக்குநர் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளருடன் விவாதித்து இதற்கான விளக்கம் அளிப்பதாக உறுதியளித்தார்.

மாநில ஆட்சிக்குழு 14.07.2016 அன்று மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சரைச் சந்தித்து அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் நியமனம் பற்றி விவாதித்த போது நமது இயக்கத்தின் கோரிக்கையினை அவர் ஏற்கவில்லை. அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் நியமனத்தால் ஏற்பட்டுள்ள அனைத்துப் பிரச்சனைகளையும் கழக உறுப்பினர்களின் எண்ண பிரதிபலிப்பையும் அமைச்சர் அவர்களுக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

மாநில ஆட்சிக்குழு தொடர்ந்து (21.06.2016, 23.6.2016, 27.06.2016, 06.07.2016 மற்றும் 14.07.2016 ஆகிய நாட்களில்) கல்லூரிக் கல்வி இயக்குநரைச் சந்தித்துக் கோரிக்கைகளைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. இயக்குநர் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து பேராசிரியர்கள் ஏற்கனவே அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நியமனம் செய்யப்பட்டுவிட்டதால் இனி நியமனம் செய்வதற்கு எவரும் இல்லை என்று இன்று வரை தகவல் கொடுத்துக் கொண்டிருக்கிறார். ஆனால் இயக்குநர் அவர்கள் நமது கழகத்திற்குத் தவறான செய்திகளை வழங்கி வந்திருக்கிறார் என்பதை உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களுடனான சந்திப்பின் போது புரிந்து கொள்ள முடிந்தது.

### பணியிடமாறுதல் பொதுக்கலந்தாய்வு

நமது முதன்மைக் கோரிக்கையில் ஒன்றான பேராசிரியர்களுக்கான பணியிடமாறுதல் பொதுக் கலந்தாய்வு உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்று மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர், உயர் கல்வித்துறைச் செயலர், கல்லூரிக்கல்வி இயக்குநர் ஆகியோரைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததன் காரணமாகக் கல்லூரிக்கல்வி

இயக்குநரகத்தால் 25.07.2016 முதல் 27.07.2016 வரை பணியிடமாறுதல் பொதுக்கலந்தாய்வு மூலமாகச் சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. இதில் சுமார் 360 க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள் தாங்கள் விரும்பிய இடத்திற்குப் பணி இடமாறுதல் பெற்றுள்ளனர். கலந்தாய்வு நடைபெற்ற நாட்களில் மாநில ஆட்சிக் குழுவினருடன் மண்டல கிளைப்பொறுப்பாளர்கள் இணைந்து கலந்தாய்வு செம்மையாக நடைபெறுவதற்கு உறுதுணையாக இருந்தனர். மண்டல/கிளைப் பொறுப்பாளர்களிடமிருந்து திரட்டிய காலிப்பணியிடங்கள் குறித்த விவரங்கள் கலந்தாய்வுக்கு வந்திருந்த பேராசிரியர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டதுடன் இயக்குநரகத்தால் வெளியிடப்பட்ட காலியிட விவரங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது. இதனைச் செம்மையாகச் செய்து முடித்த இணையதள நிர்வாகிகளுக்கு மாநில ஆட்சிக்குழு பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறது.

பணியிட மாறுதலுக்கான தகுந்த காரணங்கள் இருந்தும் மாறுதலுக்கான ஆணை கிடைக்கப் பெறாத பேராசிரியர்களுக்குப் பணியிட மாறுதல் தரவேண்டி இயக்கம் வலியுறுத்தியபோது அவற்றில் பெரும்பாலான விண்ணப்பங்களை ஏற்று ஆணை வழங்கியமைக்காகக் கல்லூரிக்கல்வி இயக்குநர் அவர்களுக்கு நமது இயக்கம் நன்றி பாராட்டுகிறது.

நமது கோரிக்கையினை ஏற்றுப் பணியிடமாறுதல் பொதுக் கலந்தாய்வு ஆணையினை விரைந்து வழங்கிய மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களுக்கும் உயர்கல்வித்துறைச் செயலர் அவர்களுக்கும் ஆட்சிக்குழு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

**2011 பேராசிரியர்களுக்குப் பணிவரன் முறை**

நமது மாநில ஆட்சிக்குழுவின் இடைவிடாத தொடர்முயற்சிகளாலும் உயர்கல்வித்துறைச் செயலரின் துரிதமான செயல்பாடுகளாலும் இயக்கத்தின் முதன்மைக் கோரிக்கையான 2011 TRB பேராசிரியர்களுக்குப் பணிவரன் முறை ஆணை (எண் 146, நாள் 21.07.2016) பெறப்பட்டுள்ளது.

**உண்மைத்தன்மைச் சான்றிதழ் பெறுவதற்கான கால நீடிப்பு**

உயர்கல்வித்துறைச் செயலருடனான சந்திப்பின் போது சான்றிதழ்களின் உண்மைத்தன்மை அறிவது அரசின் நிர்வாகச் செயல்பாடு என்பதையும் அதன் பொருட்டுத் தனியாரிடம் கட்டணம் பெறக்கூடாது என்றும் வலியுறுத்தப்பட்டது. அதனை ஏற்றுக்கொண்டு அனைத்துப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்களோடு உயர்கல்வித் துறைச்செயலர் அவர்கள் கலந்தாலோசித்துக் கட்டணமில்லாமல் உண்மைத்தன்மைச் சான்று வழங்க ஆவனச் செய்கிறேன் என்று உறுதியளித்தார்.

இதனைக் கருத்தில் கொண்டு உண்மைத்தன்மைச் சான்றிதழ் பெறுவதற்குக் கால நீட்டிப்பு வழங்க வேண்டிக் கழகம் விடுத்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட இயக்குநர் அவர்கள் (ந.க.எண. 28092/டி5/2016, நாள் 21.07.2016) கடிதம் வாயிலாக 31.02.2016 வரை கால அவகாசம் அளித்துள்ளார்.

**பல்கலைக்கழகத்தில் உள்ள ஆட்சிக்குழு, ஆட்சிப்பேரவைத்தேர்தலில் போட்டியிட அனுமதி வேண்டும் ஆணை**

பல்கலைக்கழகத்தில் உள்ள ஆட்சிக்குழு, ஆட்சிப்பேரவைத்தேர்தலில் போட்டியிடுவதற்குப் பேராசிரியர்கள் மற்றும் முதல்வர்கள் அரசின் அனுமதி பெறவேண்டும் என்று அரசாணை (நிலை) (எண் 137ஐ நாள் 15.07.2016) வெளியிட்டுள்ளது. இது கல்லூரி ஆசிரியர்களுக்கான ஜனநாயக உரிமையினைப் பறிக்கும் செயலாகும். எனவே இவ்வாணையினை உடனடியாகத் திரும்பப்பெற வேண்டும் என்று தமிழக அரசைக் கழகம் கேட்டுக் கொள்கிறது.

**உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய கோரிக்கைகள்**

நமது இயக்கத்தின் முதன்மைக் கோரிக்கைகளில் இரண்டாம் நிலைக் கல்லூரி முதல்வர்கள் நியமனம், 1998 & 2000 TRB பேராசிரியர்களுக்கான ஒருங்கிணைந்த உள் பணிமூப்புப் பட்டியல் போன்ற கோரிக்கைகள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டு வருகின்றன.

**மண்டல/கிளைச் செயலர்களின் கவனத்திற்கு**

❖ கிளை உறுப்பினர்கள், கிளைப்பொறுப்பாளர்கள் தங்களது கோரிக்கைகளை மண்டலச் செயலர்கள் மூலம் மாநில ஆட்சிக்குழுவுக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

❖ மண்டலச் செயலர் மண்டலத்திலுள்ள கிளைப் பொறுப்பாளர்களிடம் கல்லூரியில் கலந்தாய்வுக்குப் பின்னர் உள்ள காலிப்பணியிட விவரங்கள், உறுப்பினர்களின் பட்டியல், 2007 ஆம் ஆண்டிற்குப் பின் பணியில் சேர்ந்த

பேராசிரியர்களுக்குத் தரவூதியம் வழங்கப்படுவதற்கு இயக்குநரகத்திலிருந்து ஆணை பெறப்படாதவர்களின் விவரங்கள் ஆகியவற்றை உடனடியாக மாநில ஆட்சிக் குழுவுக்குத் தெரிவிக்கக் கோருகிறோம்.

- ❖ மண்டலச் செயற்குழு நடத்தப்படும்போது மாநில ஆட்சிக்குழு உறுப்பினர்களுக்கு உரிய முறையில் அழைப்பு விடுத்துச் செயற்குழுக்கூட்டத்தில் மாநிலப் பொறுப்பாளர்கள் கலந்து கொள்ளச்செய்ய வேண்டுகிறோம்.
- ❖ மண்டல/கிளைச் செயலர்கள் எந்த நேரத்திலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களை அரசுக் கல்லூரிகளில் பணியமர்த்துவதை எதிர்த்துப் போராடுவதற்கு ஏதுவாய் உறுப்பினர்களுக்கு அறிவுறுத்த வேண்டுகிறோம்.
- ❖ 2011 TRB பேராசிரியர்களுக்குப் பணிவரன் முறை ஆணை வழங்கப்பட்டுள்ளதால் அவர்களுக்குரிய தகுதிகாண் பருவம் முடித்தமைக்கான ஆணை பெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- ❖ அய்பெக்டோவின் **(AIFUCTO)** அறிவிப்பின்படி 05.08.2016 அன்று புதுதில்லியில் நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத்தை நோக்கிச் செல்லும் பேரணியில் அதிக அளவில் கலந்து கொள்ளுமாறு மாநில ஆட்சிக்குழு கேட்டுக்கொள்கிறது.

**கோரிக்கை நாள்**

14.07.2016 வியாழக்கிழமை அன்று அய்பெக்டோவின் **(AIFUCTO)** அறிவிப்பின்படி தமிழகத்திலுள்ள அனைத்து அரசு கல்லூரிகளும் கோரிக்கை நாள் அட்டை அணிந்து, கோரிக்கைக் கடிதத்தில் அனைத்து உறுப்பினர்களிடமும் கையொப்பம் பெற்றுப் பல்கலைக்கழக மானியக் குழுவின் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள அனைத்து மண்டல, கிளைப் பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும் மாநில ஆட்சிக்குழு பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

**உறுப்பினரின் மறைவு**

நமது இயக்க உறுப்பினர் பேராசிரியர் முனைவர் இரா. கோவிந்தராஜன், துறைத்தலைவர் நிறுமச்செயலியல் துறை அரசு கலைக் கல்லூரி, நந்தனம், சென்னை. அவர்களின் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

**மாநிலச் செயற்குழுக்கூட்டம்**
**நாள் 20.08.2016 சனிக்கிழமை**
**இடம். சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி, திருப்பூர்**
**கருதுபொருள் : தரவூதிய நிலுவைத் தொகை பெறுதல்**
**இளையோர்விட மூத்தோர் குறைவான ஊதியம் பெறுவதைக் களையும் ஆணைக்கான தடையாணை நீக்குதல்**
**புதிய ஊதியக்குழு பரிந்துரை**
**இன்னும் பிற**

**உறுப்பினர்களுக்கு மாநில ஆட்சிக்குழுவின் கனிவான வேண்டுகோள்**

கிளை, மண்டல, மாநில ஆட்சிக்குழுவினரின் செயல்பாடுகளில் தங்களுக்கு ஏதேனும் குறைகள்/ ஆலோசனைகள் இருப்பின் அதனை நேரடியாகப் பொதுச் செயலரிடம் எடுத்துரைத்தால் குறைகளைச் சரி செய்வதற்கு ஏதுவாக இருக்கும். வாட்ஸ்-அப் போன்ற சமூக ஊடகங்களில் உறுப்பினர்கள்/பொறுப்பாளர்களை விமர்சிப்பதைத் தவிர்க்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

**இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல்.**

-குறள்

**தோழமையுடன்**

**(இரா. தாமோதரன்)**
**பொதுச்செயலர்**